யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2015
## Term Examination, June - 2015

| தமிழ் - II | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2015) |
|---|---|---|

பகுதி - I

*01) அ)*

| | | | |
|---|---|---|---|
| i) | *3* | xi) | *4* |
| ii) | *4* | xii) | *1* |
| iii) | *1* | xiii) | *4* |
| iv) | *2* | xiv) | *1* |
| v) | *3* | xv) | *3* |
| vi) | *3* | xvi) | *1* |
| vii) | *3* | xvii) | *5* |
| viii) | *3* | xviii) | *2* |
| ix) | *3* | xix) | *2* |
| x) | *1* | xx) | *1* |

*(1 x 20 = 20 புள்ளிகள்)*

*ஆ)*

i) நான் - நான் + ஐ → என் + ஐ = என்னை
நாங்கள் - நாங்கள் + ஐ → எங்கள் + ஐ = எங்களை
முதல் நெடில் குறுகி விகாரமடைந்து வேற்றுமை உருபுகளை ஏற்கின்றன.

ii) a) ஏவல்வினை முன்னிலையிடத்திற்கு மட்டும் உரியன. வியங்கோள்வினை மூவிடத்திற்கும் உரியன. (உதாரணம் தரப்பட வேண்டும்)
b) ஏவல் கட்டளைப் பொருளில் மட்டும் வரும் வியங்கோள் வினை வாழ்த்து, வைதல், விதித்தல், வேண்டிக் கோடற் பொருள்களில் வரும்.

iii) இரண்டாம் வேற்றுமை உருபு முதல் ஏழாம் வேற்றுமை வரையுள்ள உருபுகள் மறைந்து நிற்க வரும் தொகைநிலைச் சொற்கள் (கூட்டுப் பெயர்) வேற்றுமைத் தொகை எனப்படும்.
தங்கக் காப்பு - தங்கத்தால் ஆகிய காப்பு
சிறுவர் பாடசாலை - சிறுவர்களுக்குரிய பாடசாலை

iv) a) கிளிக்கூடு விழுந்தது - விகாரம்
b) கிளி கூடு கட்டியது - இயல்பு
c) பசுப்பால் இனிமையானது - விகாரம்
d) பசு பால் தரும் - இயல்பு

v) a) நாகம்மாள் நேராக வீட்டிற்கு வந்தாள்
b) நாகம்மாள் சாவியை எடுத்தாள்
c) நாகம்மாள் மளமளவென்று பூட்டைத் திறந்தாள்
d) நாகம்மாள் உள்ளே சென்றாள் *(2 x 5 = 10 புள்ளிகள்)*

02) அ) சுருக்கம்

தலைமைக்கருத்து - தமிழ் அரசர்

சார்புக் கருத்துக்கள் -

i) மூவேந்தரும் குறுகிய மன்னரும் ஆட்சி புரிந்தமை

ii) அரசர்கள் தமக்கிடையே போரிட்டுக் கொண்டமை

iii) போரில் கிராம மக்கள் பாதிப்பு

iv) நகர மக்கள் பாதுகாப்பு

v) அரச நிர்வாகம் ஐம்பெரும் சபை

vi) சபை இயங்க தனி மண்டபங்கள்

vii) அரசன் அதிகாரம் மிக்கவன்

viii) நீதி வழங்குவதில் அவனது முடிவே இறுதியானது

**இக்கருத்துக்கள் சுருக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.**

45 - 50 சொற்களுக்கிடையில் சுருக்கம் அமைய வேண்டும்

திறனறிந்து புள்ளி வழங்குக. *(10 புள்ளிகள்)*

ஆ)

i) புலவர் கற்பனைத் திறனிலும் மொழியாற்றலினாலும் எம்மிலும் மிக்கவன். அதனால் கவிதை புனைய முடிகின்றது.

ii) ஒரு புலவனுடைய உதவியை நாடவேண்டியது தான்.

iii) கவிதைக்குரிய மனோ நிலையினை ஏற்படுத்தல். அதை பலமுறை படித்தல், படிக்கும் போது ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் இருத்தல் வேண்டும். உள்ளத்தை தோய விடுதல் வேண்டும்.

iv) கவிதையை யாத்த புலவனுடைய அனுபவம் எமக்குப் புலனாகும்.
அத்தகைய அனுபவத்தில் அழுந்துவதால் சொல்லற்கரிய இன்பத்தை அடையலாம்.
அமர வாழ்வைத் தருகின்றது.

v) புலவனுடைய அனுபவம் ஆழமானது. எம்மிடம் அது மிகக் குறைவு.
அவனிடம் உள்ள கற்பனையாற்றல் எம்மிடம் இல்லை.
அவனிடம் மொழியாற்றல் அதிகம். எம்மிடம் குறைவு.

*(20 புள்ளிகள்)*

03) (அ) தமிழியல் ஆய்வு உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் மேற்கொள்ளப்படல்.

- ♠ தமிழ்மொழி, அதன் தொன்மை, இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில்
- ♠ ஆரம்பம் - கீழைத்தேய மொழிகள் தொடர்பான ஆய்வு மேல்நாட்டவர்
  இந்திய மொழி பற்றிய ஆய்வு
  சமஸ்கிருத மொழிக்கு முக்கியம்
  பின்னர் திராவிட மொழி பற்றிய ஆய்வு - கால்ட்டுவல் போன்றோர்
- ♠ தமிழியல் ஆய்வில் 'தமிழ் கலாசாரம்' என்ற ஆங்கில சஞ்சிகை
  பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, தேவநேயபாவாணர், சீனிவாச ஐயங்கார், T. Barrow போன்றோர்
- ♠ தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டமை
- ♠ உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு பற்றிய விபரம்
- ♠ 10 வது மகாநாடு மாசிமாதம் 2015 இல் மலேசியாவில் நடைபெற்றமை

*(20 புள்ளிகள்)*

(ஆ) ♠ ஊடகங்கள் பற்றிய அறிமுகம்
அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள்

♠ ஊடகங்களின் பணி

♠ ஊடக சுதந்திரம் - உண்மை, நடுநிலைமை, பொது அபிப்பிராயம்

♠ ஊடக சுதந்திரத்தின் பயன்

♠ ஊடக சுதந்திரத்தின் துஷ்பிரயோகம்

♠ ஊடக சுதந்திரம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் *(20 புள்ளிகள்)*

(இ) ♠ அறிமுகம்

♠ பேராசிரியரின் வருகைக்கு முன் நாடக நிலை

♠ பேராசிரியர் எழுதிய நாடக நூல்கள்

♠ நாடகத்துறையில் ஏற்படுத்திய மாற்றம்

i. பொருள் மரபு

ii. பேச்சு மரபு

♠ பேராசிரியரின் நாடகப் பிரவேசத்தின் பின் நாடக நிலை

♠ பேராசிரியரின் பிரதான பணிகளும் குறிப்பிடப்பட வேண்டும் *(20 புள்ளிகள்)*

(ஈ) ♠ இலங்கையின் மொழிச் சூழல்

♠ இலங்கைப் பிரசை ஒருவர் மூன்று மொழிகளையும் கற்பதன் தேவை

♠ கற்றல் கற்பித்தலில் பிரச்சினைகள்
வரலாற்று ரீதியான காரணம்

i) சிங்களம் அரச கரும மொழியாக்கப்பட்டமை

ii) இவைகளுக்கிடையிலான புரிந்துணர்வின்மை

iii) பொருத்தமான ஆசிரியரின்மை

iv) பேதிய மன ஊக்கமும் பாடநூல்களும் இன்மை *(20 புள்ளிகள்)*

(உ) கல்வியின் நோக்கங்கள்
வாழ்க்கைக்கு வேண்டியவை

i) அறிவியற் கல்வி

ii) சமூக அறிவியல் தொழில்நுட்பக் கல்வி

iii) அழகியற் கல்வி

வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை இனங்கண்டு கற்றல் வாழ்க்கையை நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும் கல்வியைக் கற்றல் *(20 புள்ளிகள்)*

## பகுதி - II

## பகுதி 'அ'

*04)* (அ) ஐங்குறு நூறு கலித்தொகை தனிப்பாடல் வடிவத்தில் இருந்து தொடர்நிலைச் செய்யுளாக வளர்தல்

சங்ககால் தூது - தூதுப் பிரபந்தமாக வளரல்

மடல் ஏறுதல் - பெரிய திருமடல், சிறிய திருமடல் என்னும் பிரபந்தமாக வளரல்

பதிற்றுப் பத்து - பிற்காலத்தில் பதிக வடிவமாக மாறல்

புறநானூற்று போர் வெற்றிச் சிறப்புக்கள் பிற்காலத்தில் பரணி இலக்கியங்களுக்கு வழிகாட்டியது .

'பல் பூமிடைந்த படலைக் கண்ணி' என்ற பெரும் பாணாற்றுப்படை கலம்பகம் தோன்ற வழிவகுத்தது.

(ஆ) இயற்கை நெறி - அறநெறி

உலகியல் வாழ்வு - அறம் நீதி ஆசாரம்

எப்படி வாழ்ந்தான் - எப்படி வாழ வேண்டும்

சமயக்கருத்து குறைவு - சமயப் பிரசாரம், பௌத்தம் சமணம்

அகவல், வஞ்சி - வெண்பா

தனிப்பாடல் - தொடர்நிலைச் செய்யுள்

இறுக்கமான மொழிநடை பிறமொழிக்கலப்பின்மை - வடமொழிச் செல்வாக்கு

(இ) காரைக்காலமைய்யார் - அற்புதத் திருவந்தாதி, திருவிராட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

முதலாழ்வார் - மூவர் திருவந்தாதிகள்

பொருள் மரபில்

i) பக்தி இலக்கிய மரபின் தோற்றம்

ii) புராண இதிகாச கதைகளின் பணன்பாடு

செய்யுள் மரபில்

i) பதிக வடிவம்

ii) திருக்கடைக்காப்பு

iii) விருத்தப்பாவின் பயன்பாடு

iv) உருவ வழிபாடு

பேராசிரியர் செல்வநாயகம்

காரைக்காலம்மையார் முதலாழ்வார் பாடல் பல்லவர் கால பக்தி இலக்கியத்திற்கு விடிவெள்ளி எனக் கூறியமை.

*(3 x 5 = 15 புள்ளிகள்)*

05) (ஆ) சுந்தரர் திருத்தொண்டர் தொகை, நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் அந்தாதி - பெரிய புராணம் தோன்ற வழிகாட்டியது.

ஆழ்வார் பாடல்கள் கம்பராமாயணம் தோன்ற அடிப்படை பக்தி உணர்வை புலப்படுத்துவதில் இவை பெறும் முக்கியத்துவம்

பக்தி இலக்கியத்தில் கையாளப்பட்ட விருத்தம் காப்பியங்களில் பெறும் செல்வாக்கு

பல்லவர் கால புராதன இதிகாச கதைகள் காப்பியங்களின் ஊற்றாகக் காணப்படல்

(ஆ) தண்டி ஆசிரியரின் மரபே சோழர்கால காப்பிய மரபு.

பிற்காலத்தில் இம்மரபு முழுமையாக பின்பற்றாவிடினும் ஓரளவு பின்பற்றப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| திருத்தொண்டர் புராண மரபு | - | நாயக்கர் காலத்தில் திருவிளையாடற் புராணம், சேதுபுராணம், கூர்ம புராணத்தில் பிரதிபலித்தது. |
| கம்பராமாயண இதிகாச மரபு | - | நாயக்கர் காலத்தில் மகா பாரதம் |
| சோழர் கால வடமொழிக்காப்பிய மரபு | - | மகாபாரதம், கூர்ம புராணத்தில் இடம்பெறல் |
| சோழர் கால காப்பியங்களின் விருத்தப்பா | - | வில்லிபுத்துரர் வீரமாமுனிவர் காப்பியங் களில் பிரதிபலித்தது. |
| சோழர் கால சமய காப்பிய மரபு | - | தேம்பாவணி, சீறாப் புராணத்தில் பிரதி பலித்தல் |

(இ) ♠ இஸ்லாமிய படையெடுப்புக்கள் அடிப்படைக் காரணம்

♠ இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டு அவ்விடங்களில் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டமை தலபுராணங்களை தோற்றுவித்தது.

♠ அமைதியற்ற சூழ்நிலை, அரசியல் உறுதிப்பாடின்மை, பஞ்சம், வறுமை பேரிலக்கியங்களுக்குப் பதில் சிற்றிலக்கியம்

♠ அரச புலவர் தொடர்பு நெருக்கமின்மை. குறுநில அரசுகளின் தோற்றம்

♠ நாயக்கர்கால ஆட்சித்திறன் புலவர்களை கவராமை

♠ நீண்ட இலக்கியங்களை விரும்பும் வகையில் சமுதாயம் காணப்படவில்லை

*(3 x 5 = 15 புள்ளிகள்)*

06) (அ) உள்ளடக்கம், உருவம், உத்தி முறைகளில் மாற்றம்.
சமூக அரசியல் பிரச்சினை
விடுதலை உணர்வு, மொழி இன உணர்வு, சமூக ஏற்றத்தாழ்வுகளை களைதல், பெண்ணியம் சார் கருத்துக்கள்
தனிமறை அனுபவங்கள் - காதல், இயற்கை
எதிர்ப்புக் குரல்
அறிவியல் செய்திகள்
எளிநடை, எளிய பதம்
படிமம், குறியீட்டு வகை
புதுக் கவிதை

(ஆ) மத்திய தர வர்க்கத்தின் எழுச்சி
கல்வி விருத்தி, அறிவியல் வளர்ச்சி ஊடாக விருத்தி
பொதுவுடைமை வாதக் கருத்துக்களின் தோற்றம்
இந்திய சுதந்திரப் போராட்டம்
சமூக அரசியல் பண்பாட்டு இயக்கங்கள்
இன, மொழி ரீதியான உணர்வு அதிகரித்தமை

(இ) நவீன கவிதையின் முன்னோடி
விடுதலை உணர்வு - நாடு, மொழி, பெண், சமுதாயம்
மொழிநடையில் எளிமைத் தன்மை பயன்பாடு
கண்ணி, சிந்து, தெம்மாங்கு, புதிய வடிவங்கள் குறுங்காப்பியங்களின் தோற்றம்.

பிரிவு ‘ஆ’

07) (அ)

i) தல புராணங்கள் - தட்சண கையாலய புராணம்
திருக்கரைசைப் புராணம்
திருக்கோணாசல புராணம்
புலியூர்ப் புராணம்

ii) விரதங்கள் பற்றியவை - சிவராத்திரி புராணம்
ஏகாதசி புராணம்
பிள்ளையார் புராணம்

iii) இஸ்லாமிய புராணம் - முகைதீன் புராணம்
கோட்டாற்றுப் புராணம்

iv) கிறிஸ்தவ புராணம் - யோசேப்பு புராணம்
ஞானானந்த புராணம்

v) சமூக புராணங்கள் - கனகி புராணம்
தால புராணம்
கோட்டுப் புராணம்

சிறப்பியல்புகள்

ஈழத்துப் பிராந்திய சூழல்களை பிரதிபலிப்பவை

ஈழம் பற்றிய வரலாற்று தகவல்களை கொண்டவை

அந்நிய ஆட்சியில் சுதேச வழிபாட்டு மரபுகளை பேணியவை

புராணம் என்ற பெயரில் சமுதாய நோக்கும் பெற்றவை - கனகி புராணம் கோட்டுப் புராணம்

(ஆ) கடவுளரை தலைவராகக் கொண்டவை

கதிரைமலைப்பள்ளு

பறாளை விநாயகர் பள்ளு

ஞானப் பள்ளு - கிறிஸ்தவம்

நிலப் பிரபுத்துவத்தை தலைவராகக் கொண்டது

தண்டிகை கனகராயன் பள்ளு

சிறப்பியல்புகள்

ஈழத்து தலங்களை பிரபுக்களை பொருளாகக் கொண்டவை

ஈழத்துச் சூழலைப் பிரதிபலிப்பவை

பேச்சு வழக்கு மொழிநடை

08) (அ) உரைநடை வளர்ச்சி

செய்யுள் இலக்கியத்தில் நவீனத்துவம்

நவீன உரைநடை இலக்கியங்களின் தோற்றம்

பத்திரிகைகளின் தோற்றம்

அகராதி எழுதும் முயற்சி

மொழிபெயர்ப்பும் அறிவியலும்

தமிழியல் ஆய்வு முயற்சிகள்

(ஆ) உரைநடையில் எளிமைத் தன்மை

உரைநடையில் புதுமையாக்கம்

பழைய உரைநடையில் இருந்து வேறுபட்டமை

ஆக்க இலக்கியத்திற்கான உரைநடை

குறியீட்டு முறைகள்

(இ) பாரதியின் சமகாலத்தவர்

சமூக சீர்திருத்தவாதி - தேசிய வாதி

விவசாய கைத்தொழில் வளர்ச்சியினை அடிப்படையாக வைத்து கவிதைகள் எழுதியமை

ஒழுக்க மேம்பாடும் கீழைத்தேய பண்பாடும்

சுயதேவைப் பூர்த்தி நாட்டு முன்னேற்றம்

சிந்தனைச் சோலை என்ற நூல் 1980 ல் வெளியீடு